**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திங்கட்கிழமை**
**அசல் வழக்கு எண்.53/2023**
**CNR NO.TNKR090000762023**

1. R. சுப்பிரமணியன்
2. மாரியப்பன்
3. **நல்லம்மாள்** (Amended as per order in I.A.No.06/2025 Dated.24.07.2025)

... வாதிகள்

**/எதிர்/**

P. நல்லம்மாள் ... பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 25.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தங்கம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா A, B, C அட்டவணை சொத்துக்களுக்கு செல்லும் D அட்டவணை சொத்தான வண்டிபாதையை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்**

1) தாவா A அட்டவணை சொத்து 1ம் வாதியால் 11.07.1996 ம் தேதி ஒரு அருக்காணி அம்மாளிடம் இருந்து கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். தாவா B அட்டவணை சொத்து 2ம் வாதியின் தகப்பனார் காளியப்ப செட்டியாரால் 24.09.1952 அன்று கிரையம் பெறப்பட்டதாகும். தாவா

C அட்டவணை சொத்து 2ம் வாதியின் தகப்பனார் காளியப்ப செட்டியாரால் 12.04.1966ல் கிரையம் பெற்றுள்ளார். 2ம் வாதியின் தகப்பனார் 02.01.1989ல் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகளான 2ம் வாதி மற்றும் அவரது தங்கை நல்லம்மாள் சட்டப்படியான வாரிசுதாரர் என்ற முறையில் தாவா B மற்றும் C அட்டவணை சொத்துக்களை அனுபவம் செய்து வருகின்றனர்.

2) தாவா A, B, C அட்டவணை சொத்துக்களுக்கு செல்லும் வண்டி பாதையை வாதிகள் நெடுங்காலமாக பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி சொத்து தாவா D அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி பாதை குறித்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. மேற்படி பாதை மேல்புறமுள்ள தென்வடல் வண்டி பாதையில் இருந்து பழனியப்பன், முனியப்பன், முத்துச்சாமி, மாணிக்கம் மற்றும் 2ம் வாதி இவர்கள் நிலத்தின் நடுவில் கிழமேலாக செல்கிறது. அதன் விஸ்தீரணம் 750 அடி நீளமும், 12 அடி அகலமும் மொத்தம் 9,000 சதுரடி கொண்ட வண்டி பாதையாகும். மேற்படி வண்டி பாதையை தவிர வாதிகள் தங்கள் A, B, C அட்டவணை சொத்துக்களுக்கு செல்ல வேறு பாதை எதுவும் இல்லை.

3) பிரதிவாதி நல்லம்மாள் 15.12.2021ல் தனது சொத்தை கிரையம் பெற்றுள்ளார். இவர் வாதிகளை D அட்டவணை சொத்தில் நடக்க விடாமல் வாதிகளின் நிலங்களான A, B, C அட்டவணை சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பாதையின் குறுக்கே குழி பறித்து வீண் பிரச்சனை செய்து வருகிறார். இதனால் 1ம் வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக 05.03.2023ல் தோகைமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆனால் காவல்துறையினர் அதை பதிவு செய்யவில்லை. எனவே பிரதிவாதி தாவா D அட்டவணை சொத்தை வாதிகள் பயன்படுத்துவதை இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

<u>பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்</u>

4) தாவா A அட்டவணை சொத்து 1ம் வாதியால் கிரையம் பெறப்பட்டது என்பதை இந்த பிரதிவாதி மறுக்கிறார். உண்மையில் மேற்படி சொத்து அருக்காணி அம்மாள் வகையறாவைச் சேர்ந்த அவரது மகன் ராஜலிங்கம், அவரது மைனர் மகன் அசோக், ஆனந்த்

ஆகியோர்களிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்தை வாதிகள் குறிப்பிட்டு மறுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் தாவா D அட்டவணை சொத்து குறித்து எந்த ஒரு வாசகங்களும் எழுதப்படவில்லை. தாவா B அட்டவணை சொத்தை 2ம் வாதியின் தகப்பனார் கிரையம் வாங்கியதாகவும். C அட்டவணை சொத்தை 1964 ல் கிரையம் வாங்கியதாக சொல்வதையும் வாதிகளே நிரூபிக்க வேண்டும். மேற்படி ஆவணங்களிலும் தாவா D அட்டவணை சொத்து குறித்து எந்த வாசகமும் எழுதப்படவில்லை.

5) 2ம் வாதியும், அவரது தங்கையும் தாவா B, C அட்டவணை சொத்துக்களை அனுபவித்து வருவதாக சொல்வதை வாதிகளே நிரூபிக்க வேண்டும். வாதிகள் தாவா D அட்டவணை சொத்தை வண்டி பாதையாக பயன்படுத்தி வருவதாக சொல்வது உண்மைக்கு புறம்பான சங்கதிகள் ஆகும். மேற்படி வண்டி பாதை அமைப்பானது இந்த பிரதிவாதியின் நிலத்தில் எந்த ஒரு இடத்திலும் கிடையாது. வாதிகளின் நிலங்களுக்கு கிழக்குப்புறமாக உள்ள குவாரிக்கு மேற்குபுறம் சர்வே எண்.527/1 நிலத்திற்கு தெற்கு புறமும் மற்றும் குவாரிக்கு தென்புறமும் கிழமேலாக அதாவது தென்வடல் தார் ரோட்டில் இருந்து கிழக்கு முகமாக இப்பிரதிவாதி கிரையம் பெற்றுள்ள சர்வே எண்.527/2 ல் வடபுறமுள்ள சக்தி ஆறுமுகம் என்பவரது நிலத்தின் வழியாக தற்காலிகமாக வண்டி பாதை அமைப்பு உள்ளதை வாதிகள் வேண்டுமென்றே மறைத்து அவர்களுடன் கள்ள கூட்டு வைத்துக் கொண்டு அவர்களை இவ்வழக்கில் சேர்க்காமல் இப்பிரதிவாதி நிலத்தில் சட்ட விரோத அமைப்பு ஏற்படுத்த வாதிகள் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

6) வழக்குரை பத்தி 9 ல் சொல்லியுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க வேண்டும். வாதிகள் தாவா D அட்டவணை சொத்தில் குழி பறித்து வீண் பிரச்சனை செய்து வருவதாக சொல்வது பொய்யாகும். இப்பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் எண்ணத்துடன் வாதிகள் மேற்படி சொன்ன சக்திஆறுமுகம் என்பவருடன் கள்ள கூட்டு வைத்துக் கொண்டு அனைவரும் சேர்ந்து சக்திஆறுமுகம் நிலத்தில் உள்ள பாதையில் குழி பறித்து வைத்துக் கொண்டு இப்பிரதிவாதியை காவல் நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் அலைய விடுகின்றனர்.

7) வாதிகளின் சொத்திற்கு தெற்கு ஓரம் கிழமேலாக வண்டி பாதை உள்ளது. அதை மறைத்து இப்பிரதிவாதியின் இடத்தை அபகரிக்க பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இப்பிரதிவாதி வெளியூரில் வசிப்பதை பயன்படுத்திக் கொண்டு சட்ட விரோதமாக பிரதிவாதியை மிரட்டி அடி பணிய வைத்து அவரது சொத்துக்களை அபகரிக்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இப்பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணத்தையும், அதன் மூல ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்களில் எதிலும் தாவா D அட்டவணை வண்டி பாதையாக உள்ளதாக எந்த ஒரு குறிப்பும் இல்லை. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

8) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | Whether any cart track in existing in the suit ‘D’ Schedule property as alleged by the plaintiffs? |
| 2. | Whether the plaintiffs are using the ‘D’ Schedule property as cart track? |
| 3. | Whether the plaintiffs are entitled for the relief of permanent injunction without seeking of Declaration? |
| 4. | To what other relief? |

9) வாதிகள் தரப்பில் 1ம் வாதி சுப்பிரமணியன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும், 2ம் வாதி மாரியப்பன் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.7 ஆவணமும், 3ம் நபரான ராஜமாணிக்கம் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.8 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியான நல்லம்மாள் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எழுவினா எண்கள்.1 மற்றும் 2 ன் தீர்வு</u>**

**தாவா D வண்டி பாதையானது வாதிகள் சொல்வது போல நிலையில் உள்ளதா?**

**தாவா D அயிட்ட வண்டி பாதையினை வாதிகள் பயன்படுத்திகின்றனரா?**

10) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் தாவா A, B, C அட்டவணை சொத்துக்களை வாதிகள் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், தாவா D அட்டவணை சொத்தை தங்கள் நிலங்களுக்கு செல்ல வண்டி பாதையாக பயன்படுத்தி வருவதாகவும் அதை நீண்ட நெடுங்காலமாக வாதிகள் பயன்படுத்தி வருவதாக வாதிட்டனர். மேற்படி வாதத்திற்கு ஆதரவாக வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11) வா.சா.ஆ.1–11.07.1996 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் பதிவு நகல். மேற்படி ஆவணத்திலேயே தாவா D அட்டவணை சொத்து குறித்து உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள உரிமையின் அடிப்படையிலேயே வாதிகள் தாவா D அயிட்ட சொத்தை வண்டி பாதையாக பயன்படுத்துவதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் வாதி சுப்ரமணியன், ஒரு அருக்காணி அம்மாள் மற்றும் அவரது குடும்பத்தாரிடம் இருந்து சர்வே எண்.530/1 ல் 0.53.5 ஹெக். நிலமும், சர்வே எண்.530/3 ல் 0.01.5 ஹெக்.நிலமும் சேர்த்து ஒரு ஏக்கர் 36 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார்.

12) மேற்படி கிரையத்துடன் சேர்த்து சுத்துக்கால் பொளி தரிசு மாமூல் பாதையும் இந்த கிரைய நிலத்தின் மேல்புறமுள்ள தென்வடல் வண்டி பாதையில் இருந்து பழனிச்சாமி, முனியப்பன், முத்துச்சாமி, மாணிக்கம், க.மாரியப்பன் இவர்கள் நிலத்தின் நடு மத்தியில் மாமூலாக செல்லும் பொது கிழமேல் மாமூல் வண்டி பாதை பாத்தியம் உள்பட கிரையத்திற்கு கட்டுபட்டது என கண்டு மேற்படி ஆவணமானது 1ம் வாதிக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள வண்டி பாதை தான் தாவா D அயிட்ட சொத்து என வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.6 ஆக தாவா மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வரைபடத்திலும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கண்டுள்ளவாறே தாவா D அயிட்ட வண்டி பாதையானது காட்டப்பட்டுள்ளது.

13) வா.சா.ஆ.2–24.09.1952ம் தேதியிட்ட கிரைய ஆவணம். மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், காளியப்ப செட்டியார், அருணாச்சலப்பிள்ளை என்பவரிடம் இருந்து பைமாஷ் எண்.80ல் ஒரு ஏக்கர் 26 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தில் தென்வடல் பாதையில் இருந்து கிழக்கு முகமாக மாமூலாக நடக்கும் ஒத்த அடி பாதையும் மேற்படி கிரையத்திற்கு சம்பந்தம் என கண்டு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள பாதையானது தாவா D அயிட்ட சொத்து என வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

14) வா.சா.ஆ.3–12.04.1966ம் தேதியிட்ட கிரைய ஆவணம். மேற்படி ஆவணமானது காளியப்ப செட்டியாரால் கிரையம் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.527/3ல் ஒரு ஏக்கர் 30 சென்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தில் வண்டி தடம் குறித்து எந்த ஒரு சங்கதிகளும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

15) பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதிகள் தரப்பில் வாதிட்டது போல எந்த ஒரு வண்டி பாதையும் தங்கள் நிலத்தின் நடுவில் அமையவில்லை என்றும், வாதிகள் தரப்பு கிரைய ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள பாதைக்கும், தாவா பாதைக்கும் சம்பந்தம் இல்லை என்றும் வாதிட்டார். இது குறித்து பிரதிவாதி தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16) பி.சா.ஆ.1–15.12.2022ம் தேதியிட்ட கிரைய ஆவணம். பிரதிவாதியால் சர்வே எண்.527/1, 527/2ல் கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதை மேற்படி ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது. பி.சா.ஆ.2– பிரதிவாதியின் கிரையதாரரான பூங்கோதை 07.03.2022ல் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் பதிவு நகல். பி.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும் அதன் கிரையதாரரான பூங்கோதை பி.சா.ஆ.2 ல் கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

17) பி.சா.ஆ.3–பி.சா.ஆ.2 ன் மூல ஆவணம். பி.சா.ஆ.4–பி.சா.ஆ.3 ன் மூல பாகபத்திரம். மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், பிரதிவாதி கிரையம் பெற்ற நிலத்திற்கான மூல ஆவணங்கள் பி.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.5 என்பதை அறிய முடிகிறது. பிரதிவாதி தரப்பில் சர்வே எண்.527 மற்றும் 530 க்கான புல வரைபடங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.527/1, 527/2 ஐ பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார்.

18) வாதிகள் சர்வே எண்.530/1, 530/2 ஆகிய நிலங்களை கிரையம் பெற்றுள்ளனர். மேற்படி புல வரைபடத்தின் அடிப்படையில் பரிசீலனை செய்கையில், சர்வே எண்.530 க்கு மேற்குபுறம் சர்வே எண்.527 அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. சர்வே எண்.527 ஐ ஒட்டி கிழக்குப்புறம் சர்வே எண்.530/1, 530/2, 530/4 மற்றும் 530/5 ஆகிய நிலங்கள் அமைந்துள்ளது. சர்வே எண்.530/3 நிலமானது சர்வே எண்.530/2 ன் மையத்தில் அமைந்துள்ளது.

19) மேலும் புல எண்.527 வரைபடத்தை பரிசீலனை செய்கையில், சர்வே எண்.527 ல் மேற்குப்புறம் தென்வடலாக ரோடு அமைந்துள்ளதாக இரு தரப்பிலும் ஒப்புக்கொண்டுள்ளனர். மேற்படி தென்வடல் ரோட்டில் இருந்து பிரதிவாதியின் நிலமான சர்வே எண்.527/2 ன் வழியாக கிழமேலாக தாவா D அயிட்ட வண்டி பாதையானது செல்வதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இந்நிலையில் சர்வே எண்.527/2 ஐ ஒட்டி கிழக்குப்புறம் சர்வே எண்.527/3 மற்றும் 527/4 ஆகிய நிலங்கள் அமைந்துள்ளது. மேற்படி நிலங்களில் தாவா D அயிட்ட வண்டி பாதையானது செல்வதாக வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால் மேற்படி நிலங்களின் உரிமையாளர் குறித்து வாதிகள் தரப்பில் எந்த விதமான சங்கதிகளும் கூறப்படவில்லை. மேலும் மேற்படி உரிமையாளர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாகவும் சேர்க்கவில்லை.

20) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 தாவா மாதிரி வரைபடத்திலும் தாவா D அயிட்ட வண்டி பாதையானது முனியப்ப செட்டியார் மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களது இடத்திற்கு தெற்கு புறமாக செல்வதாக கண்டு மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை.

21) உண்மையில் தாவா D அயிட்ட வண்டி பாதையானது வாதிகள் சொல்வது போல நீண்ட நெடுங்காலமாக பயன்படுத்தப்பட்டிருந்தால் சர்வே எண்.527 மற்றும் 530க்கான புல வரைபடங்களிலும் மேற்படி வண்டி பாதை குறித்து நிலவியல் அமைப்பானது பதிவு செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 ஆவணத்தில் அவ்வாறு எந்த ஒரு குறிப்பும் இல்லை. எனவே வாதிகள் தரப்பில் தாவா D அயிட்ட வண்டி பாதை நிலையில் உள்ளது என கூறியுள்ள சங்கதிகள் முறையாக நிரூபிக்கவில்லை என மேற்படி எழுவினா 1ற்கு தீர்வு காண்கிறேன்.

22) மேலும் வாதிகள் தரப்பில் உண்மையில் தாவா D அயிட்ட வண்டி பாதையை பயன்படுத்தி வருவதாக இருந்திருந்தால் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து அவர் மூலமாக தாவா D அயிட்ட வண்டி பாதை அமைப்பு குறித்து அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் வாதிகள் தரப்பில் அவ்வாறு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் வாதிகள் தாவா D அயிட்ட சொத்தை வண்டி பாதையாக பயன்படுத்தி வருவதாக எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யாத நிலையில் வாதிகளால் தாவா D அயிட்ட சொத்து வண்டி பாதையாக பயன்படுத்தப்படவில்லை என மேற்படி எழுவினா 2ற்கு தீர்வு காண்கிறேன்.

<u>**எழுவினா எண்.3ன் தீர்வு**</u>

**வாதிகள் விளம்புகை பரிகாரம் இல்லாமல் வாதிகள் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?**

23) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள வண்டி பாதை தான் தாவா D அயிட்ட சொத்து என வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. வா.சா.ஆ.1ல் சர்வே எண்.530/1 மற்றும் 530/3 நிலங்கள் கிரையம் செய்யப்பட்டுள்ளது. பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 புல வரைபடத்தினை வைத்து மேற்படி கிரையத்தினை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிரைய சொத்திற்கு மேற்குபுறம் உள்ள தென்வடல் வண்டி பாதையில் இருந்து பழனிச்சாமி, முனியப்பன், முத்துச்சாமி இவர்கள் நிலத்தின் நடு மையத்தில் கிழமேலாக செல்லும் வண்டி பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது.

24) பி.சா.ஆ.7 ஆவணத்தில் சர்வே எண்.530/1 மற்றும் 530/3 நிலத்திற்கு மேற்குப்புறம் உள்ள தென்வடல் பாதையில் இருந்து கிழமேலாக வரும் வண்டி பாதை என கண்டுள்ளது. ஆனால் சர்வே எண்.530/1க்கு மேற்கே சர்வே எண்.527/4 அதற்கு மேற்கே சர்வே எண்.527/3 ஆகிய நிலங்கள் தான் அமைந்துள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி குறிப்பிட்டுள்ள தென்வடல் வண்டி பாதையானது சர்வே எண்.527/4ல் செல்வதாக பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 ஆவணங்களின் அடிப்படையில் அறிய முடிகிறது. ஆனால் இவ்வழக்கின் வாதிகள் பிரதிவாதியின் நிலமான சர்வே எண்.527/1 மற்றும் 527/2ல் தாவா D அயிட்ட வண்டி பாதை செல்வதாக கூறியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை என பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 ஆவணங்களின் அடிப்படையில் அறிய முடிகிறது.

25) வா.சா.ஆ.2 ஆவணத்தில் பைமாஷ் எண் மட்டுமே கண்டு கிரையம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பைமாஷ் எண்ணுக்கான சர்வே எண் குறித்து வாதிகள் தரப்பில் எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே தாவா D அயிட்ட சொத்து வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களில் கண்டு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என வாதிகள் தரப்பில் வாதிடுவது ஏற்கத்தக்கதாக இல்லை.

26) பிரதிவாதி தரப்பில் தாவா D அயிட்ட சொத்தை முழுவதுமாக ஆட்சேபணை செய்துள்ள நிலையில் வாதிகள் தாவா D அயிட்ட சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும். அவ்வாறு விளம்புகை பரிகாரம் கோராமல் வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டிருப்பது ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களான பழனிச்சாமி, முத்துச்சாமி ஆகியோர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

27) மேற்படி தரப்பினர்களின் நிலங்களின் வழியாக பாதை செல்வதாக தாவா மாதிரி வரைபடம் கண்டுள்ள நிலையில் மேற்படி நபர்கள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு இவ்வழக்கு ஆளாகி உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பெற

அருகதை இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

**<u>எழுவினா எண்.4 –ன் தீர்வு</u>**

**வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

28) வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்துள்ள நிலையில் வாதிகளுக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.4 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.30 16:45:11 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 சுப்பிரமணியன் (1 ம் வாதி)

வா.சா.2 மாரியப்பன் (2 ம் வாதி)

வா.சா.3 ராஜமாணிக்கம் (3 ம் நபர்)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.07.1996 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| வா.சா.ஆ.2 | 24.09.1952 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| வா.சா.ஆ.3 | 12.04.1966 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.4 | 10.04.2023 | பட்டா எண்.1730 | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 05.03.2023 | புகார் மனு | கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.6 | – | தாவா மாதிரி வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ.7 | 27.12.2017 | வாரிசு சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.8 | – | ராஜமாணிக்கத்தின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி</u>**

பி.சா.1 நல்லம்மாள் (பிரதிவாதி)

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 15.12.2022 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| பி.சா.ஆ.2 | 07.03.2022 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| பி.சா.ஆ.3 | 04.06.2020 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| பி.சா.ஆ.4 | 01.02.2016 | பாகப்பத்திரம் | பதிவு நகல் |
| பி.சா.ஆ.5 | 19.07.2000 | கிரைய ஆவணம் | பதிவு நகல் |
| பி.சா.ஆ.6 | 07.11.2025 | சர்வே எண்.527 புல வரைபடம் | கணினி நகல் |
| பி.சா.ஆ.7 | 07.11.2025 | சர்வே எண்.530 புல வரைபடம் | கணினி நகல் |

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.30 16:45:20 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

******************************
**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.53/2023**

**D.D.30.03.2026**

**AFT**

***************************